# பாரத பிரதமரின் பூட்டான் பயணம் (மார்ச் *21-22, 2024)*

மார்ச் *19, 2024*

பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் *2024* மார்ச் *21* முதல் *22* வரை பூட்டான் நாட்டுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்கிறார். இந்தியாவுக்கும் பூட்டானுக்கும் இடையில் வழக்கமான உயர்மட்ட பரிமாற்றங்களின் பாரம்பரியம் மற்றும் அதன் அண்டை நாடுகளின் முதலிடம் என்ற கொள்கைக்கு அரசாங்கத்தின் முக்கியத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தப் பயணம் அமைகிறது.

இந்த பயணத்தின் போது, பூட்டான் மன்னர் மேதகு. ஜிக்மே கேசர் நாம்கேல் வாங்சுக் மற்றும் நான்காவது மன்னர் மேதகு. ஜிக்மே சிங்யே வாங்சுக் ஆகியோருடன் பாரத பிரதமர் கலந்துரையாடுவார். மேலும் பூட்டான் பிரதமர் திரு. ஷெரிங் டோப்கே அவர்களுடனும் பாரத பிரதமர் பேச்சுவார்த்தை நடத்துவார்.

இந்தியாவும் பூட்டானும் பரஸ்பர நம்பிக்கை, புரிதல் மற்றும் நல்லெண்ணத்தில் வேரூன்றிய தனித்துவமான மற்றும் நீடித்த கூட்டாண்மையைப் பகிர்ந்து கொள்கின்றன. நமது பகிரப்பட்ட ஆன்மீக பாரம்பரியம் மற்றும் மக்களிடையேயான நட்புறவு ஆகியவை நமது உறவுகளுக்கு ஆழத்தையும், துடிப்பையும் சேர்க்கின்றன. இருதரப்பு மற்றும் பிராந்திய நலன் சார்ந்த விஷயங்களில் இருதரப்பும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், நமது இரு நாட்டு மக்களின் நலனுக்காக நமது முன்மாதிரியான கூட்டாண்மையை விரிவுபடுத்துவதற்கும், தீவிரப்படுத்துவதற்கும் வழிகள் குறித்து ஆலோசிக்கவும் இந்த பயணம் ஒரு வாய்ப்பை வழங்கும்.

**புது தில்லி**
**மார்ச்** ***19, 2024***